சேவைப் பணியில் 20 ஆண்டுகள்

# சேவாபாரதி தமிழ்நாடு

(பதிவு எண் 511/99)



# ஆண்டறிக்கை 2018 - 19








சேவாபாரதி தமிழ்நாடு மூல நடைபெற்றுவரும் சேவைப் பணிகள் விவரம்

| சேவை பணிகள் | | எண்ணிக்கை | பயனாளிகள் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | மாணவர்கள் /ஆண்கள் | மாணவிகள் /பெண்கள் |
| **தினசரி / வாரந்தோறும் நடைபெறும் சேவை பணிகள்** | | | | |
| 1 | கல்வி தான மையங்கள் | 115 | 1617 | 1808 |
| 2 | ஹிந்தி பயிற்சி வகுப்பு | 1 | 11 | 13 |
| 3 | பண்பாட்டு வகுப்புகள் | 183 | 1959 | 2563 |
| 4 | நடமாடும் நூலகங்கள் | 63 | 737 | 756 |
| 5 | தையல் பயிற்சி மையங்கள் | 13 | | 346 |
| 6 | கணினி பயிற்சி மையங்கள் | 2 | | 48 |
| 7 | சுய உதவிக் குழுக்கள் | 15 | | 275 |
| 8 | மகிளா மண்டலி | 3 | | 265 |
| 9 | பஜனை குழுக்கள் | 29 | 255 | 245 |
| 10 | சிறார் சேமிப்பு குழு | 13 | 126 | 126 |
| 11 | நடமாடும் மருத்துவ ஊர்திகள் | 24 | 9026 | 12350 |
| 12 | நியூரோதெரபி மருத்துவம் | 10 | 524 | 622 |
| 13 | ஹோமியோ முதலுதவி மையங்கள் | 5 | 210 | 290 |
| 14 | யோகா வகுப்புகள் | 53 | 584 | 631 |
| 15 | யோகா தெரபி மையங்கள் | 1 | 15 | 5 |
| 16 | சேலம் ஸ்ரீ சிவராம்ஜி ரத்த வங்கி | 1 | 3086 | 4629 |
| 17 | அன்பு இல்லங்கள் | 4 | 41 | 64 |
| | மொத்தம் | 537 | 18191 | 25036 |
| **நிகழ்ச்சிகள்** | | | | |
| | | | | |
| 18 | மாணவ மாணவிகள் - நம்பிக்கை நட்சத்திர நிகழ்ச்சிகள் | 2 | 270 | 220 |
| 19 | கோடைக்கால பண்பாட்டு வகுப்புகள் | 27 | 435 | 449 |
| 20 | திருவிளக்கு பூஜைகள் | 125 | | 5510 |
| 21 | குடும்ப நலப் பிரார்த்தனை | 103 | 539 | 1935 |
| 22 | துறவியர்கள் யாத்திரை | 127 | 4001 | 8002 |
| 23 | புத்தாண்டு பொது நலப் பிரார்த்தனை | 169 | 892 | 2600 |
| 24 | மருத்துவ முகாம்கள் | 8 | 740 | 544 |
| 25 | குளம் சுத்தம் செய்தல் | 3 | 280 | 91 |
| 26 | ரயில் நிலையம் தூய்மை பணி | 15 | 700 | 155 |
| 27 | அரசு மருத்துவமனை தூய்மை பணி | 1 | 50 | 110 |
| 28 | பேருந்து நிலையம் தூய்மை பணி | 3 | 65 | 50 |
| 29 | உழவார பணி | 22 | 348 | 298 |
| 30 | முப்பெரும் விழா | 70 | 1579 | 1582 |
| 31 | ரத்த தான முகாம்கள் | 8 | 740 | 544 |
| 32 | மூன்று நாட்கள் மகளிர் முகாம் | 7 | | 290 |
| 33 | மூன்று நாட்கள் ஆண்கள் முகாம் | 1 | 24 | |
| 34 | பத்து நாட்கள் மகளிர் முகாம் | 1 | 137 | |
| 35 | மாவட்ட ஆண்கள் முகாம் | 2 | 34 | |
| 36 | 3 1/2 மணி நேர வர்க | 16 | 40 | 239 |
| 37 | மாவட்ட ஆண்டு விழா | 6 | 785 | 1732 |
| 38 | இதர பணிகள் | 4 | 30 | 290 |
| | | | | |
| | மொத்தம் | 720 | 11689 | 24641 |

சேவை பண்பாடு நல்லிணக்கம்

# சேவாபாரதி தமிழ்நாடு

பதிவு எண் 511 / 99

# ஆண்டறிக்கை
# 2018 - 19

'சேவா' இரண்டாவது தளம்,
79, டாக்டர் அழகப்பா சாலை,
புரசைவாக்கம், சென்னை - 600084.
தொலைபேசி: 044 2642 4076/ 63792 67872
e.mail: sbtn9999@gmail.com
Website: sevabharathitn.org

# சேவாபாரதி தமிழ்நாடு

## மாநில பொதுக்குழு கூட்டம்

**ஸ்ரீ கலியன் இராமானுஜ கூடம் என்னும் வன்னியகுல க்ஷத்திரிய தர்ம சத்திர அறக்கட்டளை, ஸ்ரீபெரும்புதூர்,**
2019 **ஜூலை** 13,14 **சனி, ஞாயிறு**

அன்புடையீர் வணக்கம்,

சேவாபாரதி தமிழ்நாடு அறக்கட்டளையின் பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம். *2018 - 19* க்கான ஆண்டறிக்கை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

சேவாபாரதி தமிழ்நாடு துவங்கி இருபதாவது ஆண்டு முடியும் தருவாயில் நாம் இருக்கிறோம். *1999* செப்டம்பர் *9*ஆம் தேதி துவங்கிய நமது அமைப்பு கடந்த *20* ஆண்டுகளாக சேவை பணியில் பல மைல்கல்களை தாண்டி வந்திருக்கிறது. *2004*ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி சமயத்திலும், *2015* சென்னை வெள்ள சமயத்திலும் அதை தொடர்ந்து நடைபெற்றுவரும் சேவை பணிகளிலும் நம்முடைய பணி மிக அளப்பரியது. அதற்கு காரணம் சேவை மனப்பான்மை கொண்ட உங்களைப் போன்ற தொண்டர்கள்தான் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த ஆண்டு நம் சேவை எண்ணிக்கை அகலமாகவும், ஆழமாகவும் வேரூன்றி வளர்ந்து வருகிறது என்பதை இந்த ஆண்டறிக்கையில் கொடுத்துள்ள புள்ளிவிவரங்கள் மூலம் தெரிந்துக் கொள்ளலாம். நமது சேவை மூலம் சமுதாயத்தில் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை, ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றிய விவரமும் அறிக்கையில் உள்ளது.

கடந்த ஆண்டை போல இந்த ஆண்டும் புகைப்படங்களும் செய்திகளும் தலைமை அலுவலகத்தில் குவித்துவிட்டன. ஆகையினால் ஆண்டறிக்கையில் இடம் பற்றாக்குறை காரணமாக எல்லா செய்திகளையும் பிரசுரிக்க முடியவில்லை என்பதை வருத்ததுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்
தேசியப் பணியில்
R.K. லீலா கிருஷ்ணன்
மாநிலப்பொதுச்செயலாளர்

# மாநில பொதுக்குழு கூட்டம்

**சேவா**பாரதி தமிழ்நாடு அறக் கட்டளையின் மாநில பொதுக்குழு கூட்டம் கடந்த ஆண்டு ஜூலை 14,15 தேதிகளில் ஒசூர் மத்திகிரி ஸ்ரீ வாசவி மஹாலில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சேவாபாரதி தமிழ்நாடு அறக்கட்டளையின் அறங்காவலரும் ஆர்.எஸ்.எஸ் தென் பாரத தலைவருமான திரு. R.வன்னியராஜன், ராஷ்ட்ரீய சேவாபாரதியின் சுய உதவிக் குழு பொறுப்பாளர் திரு. சுந்தர லட்சுமணன், திரு.சாம்பமூர்த்தி, திரு. V.G.ஜெகதீசன், திரு. பக்தன், சேவாபாரதி தமிழ்நாடு மாநில தலைவர் திரு. B. ரபு மனோகர் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர். பொதுக்குழுவில் ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டனர்.




பொதுக்குழுவில் கடந்த ஆண்டு நடைபெற்ற சேவைப் பணிகள் பற்றியும், இந்த ஆண்டு செய்ய வேண்டிய பணிகள் பற்றிய ஆலோசனை நடைபெற்று முடிவுகள் எடுக்கப்பட்டன. துறை வாரியாகவும், பொறுப்பு வாரியாகவும் சந்திப்புகள் நடைபெற்றன.

# ஆன்றோர்கள் பார்வையில் ஆண்டறிக்கை



**க**டந்த ஆண்டு நாம் வெளியிட்ட ஆண்டறிக்கையை சமுதாயத்தில் உள்ள பல பெரியவர்களிடம் கொண்டு சேர்ப்பிக்க வேண்டும் என்று வேண்டுக்கோள் விடுத்து யிருந்தோம். அதை பல தொண் டர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களுக்கு ராஷ்ட்ரீய சேவாபாரதியின் அகில பாரத சுய உதவி குழு பொறுப்பாளர் திரு சுந்தர லெட்சுமணன், அகில பாரத பயிற்சி பொறுப்பாளர் திரு ஸ்ரீதர் சாகர் ஆகியோர் வழங்கினார்கள். புத்தகத்தை பெற்று கொண்ட சுவாமிகள் ஒவ்வொரு பக்கமாக படித்து பல விஷயங்களில் அவர்களுடைய கருத்தை குறிப்பிட்டார்கள்.



வேலூர் **VIT** கல்வி நிலையத்தின் உதவி தலைவர் திரு G.V. செல்வம் அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

# கல்விப் பணி

## கல்விதான மையங்கள்

**அ**ன்னசத்திரம் கட்டுவது, ஆலயங்களை எழுப்புவதை விட ஏழை ஒருவனுக்கு கல்வி அளிப்பதே சிறந்தது என்கிறார் மகாகவி சுப்ரமணிய பாரதியார்.

சேவாபாரதி தமிழ்நாடு சேவையில் கல்வி பணியை தனது முதன்மை பணியாக ஏற்று செயல்படுத்தி வருகிறது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்களின் கல்வி தரத்தை உயர்த்துவதற்காக கிராமங்கள், குடிசை பகுதிகளில் தினசரி இரண்டு மணி நேரம் இந்த கல்வி தான மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது சேவாபாரதி தமிழ் நாடு மூலம் 115 இடங்களில் கல்விதான மையங்கள் செயல் பட்டு வருகின்றன.

## இருளர் வாழ்வில் ஓர் ஒளி

★ திருவள்ளூர் மாவட்டம் புன்னப்பாக்கம் பகுதியில் இருளர் சமுதாய மக்கள் அதிகம் வசிக்கின்றனர். இவர்கள் சரியாக பள்ளிக்கு செல்லாமல் வேலைக்கு சென்று விடுகின்றனர். அந்த பகுதியில் கல்வி தான மையம் நடத்தி வரும் ஆசிரியை திருமதி ராஜேஸ்வரி அவர்களிடம் பேசி அதில் 20 பேர்களை பள்ளியில் தொடர்ந்து படிக்க முயற்சி எடுத்து வெற்றி பெற்றுள்ளார். அதில் சிலர் தற்போது எட்டாம் வகுப்பு படித்து வருகின்றனர். ●



# பண்பாட்டு வகுப்புகள்

**ஒ**வ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்களில் பத்து நாட்கள் கோடைக் கால பண்பாட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. தினசரி இரண்டு மணி நேரம் நடைபெறும் வகுப்பில் தேசபக்தி, தெய்வபக்தி பாடல்கள், நன்னெறி கதைகள், யோகா, விளையாட்டு, பொது அறிவு நிகழ்ச்சி கள், நினைவுத்திறன் போட்டிகள் போன்றவை கற்றுக் கொடுக்கப் படுகின்றன.



பண்ருட்டியில் நடைபெற்ற பண்பாட்டு வகுப்பில் 150 மாணவ, மாணவிகள் கலந்துக் கொண்டனர்.



சேலம் அம்மாப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 201 மாணவ, மாணவிகள் கலந்துக் கொண்டனர்.

# நடமாடும் நூலகம்

**மா**ணவ மாணவிகளின் உலக அறிவுத் திறன் வளர நடமாடும் நூலகங்களை சேவாபாரதி தமிழ்நாடு நடத்தி வருகிறது. சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் வெளியிட்டுள்ள கதை மலர் தொகுப்பு 25 புத்தகங்கள் கல்விதான மையம் நடைபெறும் ஒவ்வொரு கிராமத்திற்கும் வழங்கப் பட்டு உள்ளன. நம் நாட்டில் வாழ்ந்த ரிஷிகள், மகான்கள் ஆகியோரைப் பற்றி 210 சம்பவங்கள் அதில் உள்ளன.

திருவள்ளூரில் அக்டோபர் 28ம் தேதி நடைபெற்ற மாதாந்திர கல்வி தான மைய ஆசிரியைகளுக்கான பயிற்சி வகுப்பில் இந்த நூல்களை சேவாபாரதி தமிழ்நாடு மாநில தலைவர் திரு.B. ரபு மனோகர் வெளியிட்டார். திருவள்ளூர் மாவட்ட செயலாளர் திருமதி. தனக்கோட்டி பெற்றுக் கொண்டார்.



இந்த புத்தகங்களை முழுமையாக படிக்கும் ஒவ்வொரு மாணவ, மாணவிகளும் எதிர் காலத்தில் ஒரு சிறந்த பாரதீயர்களாக உருவாகுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

# ஆசிரியர் ஆசிரியைகளுக்கு மாதாந்திர பயிற்சி வகுப்பு

**ஆ**சிரியர் ஆசிரியைகளின் திறமை அதிகரிக்க மாதம்தோறும் மாவட்ட அளவில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. எளிமையாக கற்றுக்கொடுப்பது, விளையாட்டு, பாடல் பயிற்சி, மாணவர்கள், பெற்றோர்களிடம் நடந்து கொள்ளும் முறை போன்ற விஷயங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.



திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் கல்வி தான மைய ஆசிரியர்களின் மாதாந்திர சந்திப்பு கடந்த நவம்பர் 4ம்தேதி நடைபெற்றது. இதில் சேவாபாரதி மாநில பொதுச் செயலாளர் திரு. R.K லீலா கிருஷ்ணன் பங்கு கொண்டார்.



வேலூர் மாவட்ட குடி யாத்தம் சரஸ்வதி வித்யாலயா பள்ளியில் பிப்ரவரி 10 அன்று நடைபெற்ற பயிற்சி வகுப்பில் மாவட்ட செயலாளர் திரு சேகர், மாவட்ட பொருளாளர் திரு விஜயகுமார் ஆகியோர் வழி நடத்தினர்.

கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற கல்விதான மைய ஆசிரியைகளுக்கான மாதாந்திர பயிலரங்கம்.



# சில ஆண்டு விழாக்கள்

**தி**ருவள்ளூர் மாவட்ட ஆண்டுவிழா கடந்த பிப்ரவரி 24ம்தேதி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில்



சிறப்பு விருந்தினராக சென்னை ஆரக்கிள் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் திரு கார்த்திக் திருநாராயணன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

விழாவில் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக இருந்தன.



★சென்னை பெரிய சேக்காடு சுவாமி விவேகானந்தா கல்வி தான மையத்தின் சார்பாக எட்டாவது ஆண்டு விழா பிப்ரவரி 10ஆம் தேதி நடைபெற்றது. இந்த விழாவுக்கு சேவாபாரதி தமிழ்நாடு மாநில துணைத் தலைவர் திரு R. நாராயணன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

★ பெரம்பூர் மாவட்டம் கொளத்தூரில் உள்ள ஹிந்தி பயிற்சி வகுப்பின் மூன்றாம் ஆண்டு விழா அக்டோபர் 28ம் தேதி அன்று நடைபெற்றது. ஒரு மணி நேரம் நடை பெற்ற விழாவில் அனைவரும் ஹிந்தியில் உரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் திரு. செல்வகுமார், திரு.L. நடராஜன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

●



# திருவான்மியூர் ஆண்டு விழா

**செ**ன்னை திருவான்மியூரில் உள்ள பாரதி சேவா மையத்தின் 17வது ஆண்டு விழா 2019 பிப்ரவரி 24ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. ஊர்வலத்தை சேவாபாரதி சென்னை கோட்ட தலைவர் திரு G. மதிவாணன் துவக்கி வைத்தார்.






பொது நிகழ்ச்சியில் முன்னாள் எம்பி திரு இல. கணேசன் மற்றும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி R.S. ராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவில் மொத்தம் 38 விதமான நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தது. மாலை மூன்று மணிக்கு ஆரம்பித்த நிகழ்ச்சி இரவு 10 மணி வரை நடைபெற்றது. கபடி, கோலப் போட்டி, பேச்சு போட்டி மாணவ, மாணவிகளின் சிறப்பு சொற்பொழிவு, விநாயகர், கிருஷ்ணர், ஐயப்பன், கருப்பசாமி நடனங்கள், வேலுநாச்சியார் நாடகம் என விதவிதமாக நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. அனைத்து கலை நிகழ்ச்சிகளும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. ●

நிகழ்ச்சியில் எட்டு சேவைகளைப் பற்றி ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. அதிலிருந்து சில துளிகள் :

★ இரண்டு இடங்களில் நடைபெற்று வரும் கல்வி தான மையத்தில் மொத்தம் 110 மாணவ மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். மாதந்தோறும் பெற்றோர் சந்திப்பு நடைபெறுகிறது. இவர்களுக்கு 10 அம்ச ஒழுக்க விதிமுறைகள் உள்ளன. ஏழை மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை ஏற்பாடு செய்யப்படுகின்றன.

★ எட்டு இடங்களில் பண்பாட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. 270க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயன் பெற்று வருகின்றனர்.

# மருத்துவப் பணிகள்

## இலவச நடமாடும் மருத்துவ ஊர்தி

**தெ**ன் சென்னை, வட சென்னை பகுதிகளில் இரண்டு இலவச நட




மாடும் மருத்துவ ஊர்திகளை மூன்று ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. அலோபதி மருத்துவர், செவிலியர், மருந்தாளுனர், முகாம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோருடன் இந்த ஊர்திகள் வாரந்தோறும் 24 குடிசைப் பகுதிகளுக்கு சென்று வருகிறது. தினசரி சுமார் 200 நோயாளிகள் இதன் மூலம் பயனடைகிறார்கள்.

நடமாடும் மருத்துவ குழுவின் வாராந்திர பரிசோதனை, இலவச மருந்து விநியோகம் மூலம் பல பகுதிகளில் சராசரியான ரத்த சிவப்பணுக்கள் (Red Blood Cell) எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சராசரி சர்க்கரை அளவு கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது. நோய் வராமல் தடுக்கும் முறைகள், சுகாதார விழிப் }புணர்வு போன்றவற்றிக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன. ●



# மருத்துவ முகாம் மகத்தான சாதனை




**தெ**ன்சென்னையில் கடந்த ஓராண்டில் 415 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளன. இதன் மூலம் 9,927 ஆண்கள் 10,099 பெண்கள் மொத்தம் 20,026 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

தென்சென்னை மருத்துவ ஊர்தி 2016 ஆகஸ்ட் 26ஆம் தேதி துவக்கப்பட்டது அன்று முதல் மார்ச் 2019 வரை 1,282 மருத்துவ முகாம்கள் நடைபெற்று உள்ளன. 16,001 ஆண்கள் 35,371 பெண்கள் மொத்தம் 51,372 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

---



வடசென்னையில் கடந்த ஓராண்டில் 542 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளன இதன் மூலம் 8,486 ஆண்கள் 14,134 பெண்கள் மொத்தம் 22,620 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

வடசென்னை மருத்துவ ஊர்தி 2017 ஜனவரி 29ஆம் தேதி துவக்கப்பட்டது அன்று முதல் மார்ச் 2019 வரை 1,324 மருத்துவ முகாம்கள் நடைபெற்று உள்ளன 21,747 ஆண்கள் 33,605 பெண்கள் மொத்தம் 55,352 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

வடசென்னை, தென்சென்னை இரண்டு மருத்துவ ஊர்திகள் இணைந்து மார்ச் 2019 வரை 2,606 முகாம்கள் நடைபெற்றுள்ளன.

# தென் சென்னை மருத்துவ ஊர்தி 1000வது முகாம் நிறைவு விழா

**தெ**ன் சென்னையில் இலவச நடமாடும் மருத்துவ ஊர்தியின் 1000 வது நிறைவு விழா கடந்த ஜூலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் RxMD நிறுவனத்தின் இயக்குனர் திரு. நிரஞ்சன், சேவாபாரதி தமிழ்நாடு தலைவர் திரு B. ரபுமனோகர், மாநில துணைத்தலைவர் திரு K.வேதகிரி சென்னை மாநகர தலைவர் திரு. G.மதிவாணன், ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் மொத்தம் 140 பேர் கலந்து கொண்டனர்.




சென்னையில் மருத்துவ சேவை ஆற்றிவரும் நட மாடும் மருத்துவ ஊர்தி யினை அம்பத்தூர் அத்தி பட்டு பகுதியில் பிப்ரவரி 1ஆம் தேதி சோழா இன்சூரன்ஸ் நிறுவ னத்தின் CSR தலைமை அதிகாரி திரு திவாகர், சேவாபாரதி தமிழ்நாடு மாநில துணைத் தலைவர் திரு R. நாராயணன், திரு K.வேதகிரி ஆகியோர் பார்வையிட்டனர்.



# குருதி அளித்து உயிர்காக்கும் ஸ்ரீ சிவராம்ஜி ரத்த வங்கி



## ரத்த தான முகாம்

**சேலம்** ஸ்ரீ சிவராம்ஜி ரத்த வங்கி கடந்த 16 ஆண்டுகளாக லாபம் நோக்கமின்றி செயல் படும் ஒரு ரத்த வங்கி. இதுவரை 250க்கும் அதிகமான ரத்ததான முகாம்களை நடத்தி ஒரு லட்சத்திற்கும் அதிகமான நோயாளிகளுக்கு சேவை செய்து ள்ளது. கடந்த ஒரு ஆண்டு மட்டும் 7,715 யூனிட்கள் ரத்தம் வழங்கப்பட்டுள்ளன. ஏழை நோயாளிகளுக்கு இலவச மாகவும் ரத்தம் வழங்கப்படுகிறது.




சேவாபாரதி தமிழ்நாடு, தர்மபுரி சிக்மா டியூஷன் சென்டரும் இணைந்து 2018 ஆகஸ்ட் 15ஆம் தேதி ஒன்பதா வது ஆண்டாக ரத்த தான முகாம் நடைபெற்றது. மொத்தம் 236 பேர் ரத்த தானம் செய்தனர்.

தர்மபுரி மாவட்டம் இண்டூரில் பிப்ரவரி 6ஆம் தேதி ரத்ததான முகாமில் 91 நபர்கள் ரத்த தானம் செய்தனர். ரத்த தான பைகளை மாவட்ட அரசு மருத்துவமனைக்கு மாவட்ட பொருளாளர் திரு ஆதிமூலம் வழங்கினார்.



# நியூரோதெரபி மருத்துவம்

மும்பையைச் சேர்ந்த டாக்டர் லஜ்பத் ராய் மெஹ்ரா என்பவரால் மாற்று மருத்துவ சிகிச்சை முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. நியூரோதெரபியில் நோய்களுக்கு எந்த மருந்தையும் உட் கொள்ள வேண்டியதில்லை. உடலில் உள்ள நரம்புகளைத் தூண்டுதல், நிணநீர் சுரப்பிகள் சரியாக செயல்பட வைப்பதின் மூலம் நோய்களை குணப் படுத்த முடியும் என்ற ஒரு திட்டத்தின் அடிப்படையில் இந்த மையங்கள் செயல்படுகின்றன.

புரசைவாக்கம், கோடம்பாக்கம், அம்பத்தூர், பெரம்பூர், திருவெற்றியூர் (இரண்டு மையங்கள்), குரோம் பேட்டை, வியாசர்பாடி எம்.கே.பி நகர், வேளச்சேரி, செங்கற்பட்டு ஆகிய 10 இடங்களில் இந்த மையங்கள் செயல்படுகின்றன.



# சர்வதேச யோகா தினம்




சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு பல ஊர்களில் சிறப்பாக யோகா பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.



தர்மபுரி மாவட்டம் இண்டூரில் நடை பெற்ற நிகழ்ச்சியில் 240 பேர் கலந்துக் கொண்டனர். 60 பார்வையாளர்கள் உட்பட மொத்தம் 300 நபர்கள் கலந்து கொண்டனர்.




சேலத்தில் நடைபெற்ற சர்வதேச யோகா நிகழ்ச்சி.



தாம்பரம் குரோம்பேட்டை எஸ்.பி.ஐ. காலனியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 157 பேர் பங்கு பெற்றனர்.

# 'சேவா'வில் தெரபி



சேவாபாரதி தமிழ்நாடு அலுவலகத்தில் தினசரி நடைபெற்று வரும் யோகா தெரபி வகுப்பு




சேவாபாரதி தமிழ்நாடு அலுவலகத்தில் வாரம் இருமுறை நடைபெற்று வரும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான நியூரோ தெரபி மையம்.

# சுயசார்பு பணிகள்

## தையல் பயிற்சி மையங்கள்

மகளிர் மத்தியில் பொரு ளாதார மேம்பாட்டை ஏற் படுத்துவதற்கு இலவச தையல் பயிற்சி மையங்கள் பெரிதும் உதவுகின்றன சென்னையில் முடிச்சூர், விருகம்பாக்கம், அயப்பாக் கம்,, அயனாவரம், திருவெற்றியூர், வியாசர்பாடி, பழவேற் காடு, வந்தவாசி, ஓசூர், சேலம், மேச்சேரி, தாரமங் கலம், ராசிபுரம் ஆகிய இடங்களில் இந்த பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.



இங்கு பயிற்சி பெற்ற பலர் சுயமாக சம்பாதிக்க தொடங்கி இருக்கிறார்கள். அவர்கள் வருமானத்தை அதிகப்படுத்தி உள்ளது.

தாம்பரம் முடிச்சூர் பாரத மாதா சேவை மையத்தில் நடைபெற்று வரும் தையல் பயிற்சி வகுப்பு.



**திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் நடைபெற்று வரும் இலவச தையல் பயிற்சி மையம், இலவச கணினி பயிற்சி மையம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற சகோதர, சகோதரிகளுக்கு சான்றிதழ் அளிக்கும் நிகழ்ச்சி செப்டம்பர் 30ஆம் தேதி நடை பெற்றது.**

# பொருளீட்டும்

## தையல் கற்ற 'தையல்'




**ப**ழவேற்காடு சகோதரி நிவேதிதா தையல் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற பல பெண்களின் வாழ்வாதாரம் இன்று உயர்ந்துள்ளது. பழவேற்காடு மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள்தான் அதிகம். 2004ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி. அப்போதிலிருந்து நாம் அங்கு சேவை ஆற்றி வருகிறோம். 2005 முதல் அங்கு தையல் பயிற்சி, கணினி பயிற்சி மையங்கள் தொடங்கி பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த தையல் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற பலர் இன்று ஆடை ஏற்றுமதி நிறுவனங்கள் பணியிலும், சுயதொழிலும் செய்து வரு கின்றனர்.

★ சாட்டாங் குப்பத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீமதி. கணவர் திரு விஜயரங்கன் தனியார் நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளியாக உள்ளார். இவர்களுக்கு ஒரு மகள், ஒரு மகன். ஸ்ரீமதி சேவாபாரதி மையத்தில் தையல் பயிற்சி பெற்று இன்று ஒரு தையல் இயந்திரம் வாங்கி தன் இல்லத்திலிருந்தே தொழில் செய்து வருகிறார். மாதம் ரூ.3,000 சம்பாதிப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார். தன் குடும்பத்திற்கு இந்த வருமானம் மிகவும் பயன் உள்ளதாக இருப்பதாக தெரிவித்தார்.

ஸ்ரீமதியைப் போலவே பழவேற்காட்டைச் சேர்ந்த திருமதி முத்துசெல்வி, சாட்டாங்குப்பத்தைச் சேர்ந்த திருமதி தில்லிராணி, பிரியா, எடமணி கிராமத்தைச் சேர்ந்த திருமதி பரிமளா, ஆண்டிக்குப்பத்தைச் சேர்ந்த திருமதி ரேகா மற்றும் பலரும் உள்ளனர்.

# கணினி பயிற்சி மையங்கள்

இளைஞர்களிடையே கணிப்பொறி அறிவு வளர்ச்சிக்காக முடிச்சூர், பழ வேற்காடு, ஆகிய இடங்களில் கணினி பயிற்சி மையங்கள் நடைபெற்று வருகின்றன.



தாம்பரம் முடிச்சூர் பாரதமாதா சேவை மையத்தில் நடைபெற்று வரும் கணினி பயிற்சி வகுப்பு.

## வைபவஸ்ரீ

சமூகத்திலும் குடும்பத்திலும் பொருளாதார வளர்ச்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களை மேம்படுத்துவதற்கான சேவாபாரதி தமிழ்நாடு சுய உதவிக் குழுக்களை நடத்தி வருகிறது. இதற்கு வைபவஸ்ரீ என்று பெயர்.

வைபவஸ்ரீ குழுக்கள் வெறும் பண குழுக்களாக இல்லாமல் பண்பாட்டு குழுக்களாக மாற்றி, பெண்களின் திறமைகளை மேம்படுத்தி சமுதாயத்தில் ஒரு சிறந்த குடிமக்களாக ஆக்குவதே இந்தக் குழுக்களின் நோக்கமாகும்.



சென்னை பெரம்பூரில் நடை பெற்ற வைபவஸ்ரீ கூட்டத்திற்கு ராஷ்ட்ரீய சேவாபாரதி அகில பாரத பொறுப் பாளர் திரு சுந்தர லெட்சுமணன் கலந்துக் கொண்டார்.

அம்பத்தூர் ஜம்புகேஸ்வரர் மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினராக உள்ள கணவரை இழந்த ஒரு பெண்மணி இக்குழு வின் மூலமாக முன்தொகை பெற்று தனது பெண்ணை படிக்க வைத்துள்ளார். அந்த பெண் பத்தாம் வகுப்பில் 400க்கும் மேல் மதிப்பெண்கள் பெற்று ள்ளார்.

# சமுதாய நலன்

## அன்பு இல்லங்கள்




சமுதாயத்தில் கைவிடப் பட்ட குழந்தைகளை நாம் அனாதைகள் என்று எண்ணுவ தில்லை. அவர்களும் நமது சகோதர சகோதரிகள் தான். அவர்களுக்கு தேவை, ஆத்மார்த்தமான அன்பு. அது கொடுக்கின்ற இடம் தான் அன்பு இல்லங்கள்.

பெண்களுக்காக மூன்று அன்பு இல்லங்களும், ஆண்களுக்காக ஒரு அன்பு இல்லமும் செயல்பட்டு வரு கிறது. சென்னையில் சக்தி அன்பு இல்லம், ஆம்பூரில் ஸ்ரீ சமயவல்லி தாயார் அன்பு இல்லம், ஓசூரில் ஸ்ரீ நிவேதிதா நிகேதன் ஆகியவை பெண்கள் அன்பு இல்லங்கள் மற்றும் ஓசூர் ஸ்ரீ சாரதா நிகேதன் ஆண்கள் அன்பு இல்லமாக செயல்பட்டு வருகின்றன.



# குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் திருவிளக்கு பூஜை
# காஞ்சி சங்கராச்சாரியார் ஆசியுரை

கண்ணகி நகர் சென்னையில் உள்ள மிகப்பெரிய குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பகுதி இது சென்னை துரைப்பாக்கம் அருகில் அமைந்துள்ளது. இங்கு அரசு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட சுமார் 26,000 அடுக்குமாடி வீடுகள் உள்ளன. வடசென்னை குடிசை பகுதிகளில் தங்கியிருந்தவர்களுக்காக இந்த வீடுகள் அளிக்கப் பட்டுள்ளன.




இந்தப் பகுதியில் சுந்தரம் ஐயா என்ற அடியார் மத்திய காசி விஸ்வநாத கோயில் கட்டி இருக்கிறார்.

இங்கு சேவாபாரதியின் நடமாடும் மருத்துவ ஊர்தி வாரந் தோறும் சென்று மருத் துவ சேவையாற்றி வரு கிறது.

கடந்த மே 21 செவ்வாய் கிழமை மழை வேண்டியும், உலக நன்மைக்காகவும் திரு விளக்கு பூஜை நடை பெற்றது. மொத்தம் 1,080 தாய்மார்கள் இதில் கலந்துக் கொண்டனர். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு ஆசியுரை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் சங்கர வித்யாலயா பள்ளி தாளாளர் திரு ராம கிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த திரு விளக்கு பூஜை அந்த பகுதி மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்த ஒரு நிகழ்வாகும்.



# ஓசூரில் திருவிளக்கு பூஜை

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் ஜலகண்டேஸ்வரர் கோவிலில் பிப்ரவரி 12ஆம் தேதி திருவிளக்கு பூஜை நடைபெற்றது. ஸ்ரீ சபரிமலை ஐயப்பா சேவா சமாஜத்தின் தேசிய துணை பொதுச் செயலாளர் திரு துரை சங்கர், சேவாபாரதி தமிழ்நாடு மாநில செயலாளர் திருமதி ஜே.சி. இந்துமதி ஆகியோர் கலந்து கொண்டார்கள். மொத்தம் கலந்துக் கொண்ட தாய்மார்கள் எண்ணிக்கை 216.



# துறவிகள் யாத்திரை

**செ**ன்னை குடிசை பகுதியில் சமுதாய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக கடந்த மூன்று ஆண்டுகளாக சித்திரை புத்தாண்டு அன்று துறவிகள் யாத்திரை நடைபெற்று வருகிறது. துறவிகள் வீடு வீடாக சென்று விளக்கேற்றியதன் மூலம்



அவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியும் சந்தோசமும் ஏற்பட்டு வருகிறது. இவ்வாண்டு துறவிகள் செல்லும் போது ஒவ்வொரு வீட்டிற்கும் அங்காள பரமேஸ்வரி அம்மன் படமும், குடும்ப நல பிரார்த்தனை புத்தகமும் கொடுக்கப்பட்டன.

தமிழகத்தின் பல பகுதி யிலிருந்து 58 துறவிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சென்னையில் உள்ள 101 நகர்களில் 56 நகரங்களில் 127 இடங்களில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. மொத்தம் 4,401 வீடுகளுக்கு துறவியர்கள் சென்று திருவிளக்கு ஏற்றி ஆசி அளித்தனர் ●

# குடும்ப நலப் பிரார்த்தனை

**வி**பத்து, உடல் நல குறைவு, குழந்தையின்மை, திருமணம் தடைப் படுதல் போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்படுபவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்க ளுக்காக குடும்ப நலப் பிரார்த்தனை நடத்தி வருகிறார்கள் சேவாபாரதி தொண்டர்கள். சமுதாயம் தங்களைப் பற்றி கவலைப்படுகிறது, துணை நிற்கிறது, துன்பத்தில் பங்கு கொள்கிறது என்ற நம்பிக்கையை பாதிக்கப்படுபவர்கள் மத்தியில் உருவாக்கி அவர்களின் மன உளைச்ச லிருந்து வெளிவர இந்த குடும்ப நலப்பிரார்த்தனை பெரிதும் உதவுகிறது.



## பிரார்த்தனை நடந்தது; தாய்மை அடைந்தார்

**ஆ**ம்பூர் மாவட்டம் நாட்டறம் பள்ளி ஒன்றியம் ஆவாரங்குப்பம் கிராமத்தில் வசித்து வரும் ஒரு தம்பதியினருக்கு திருமணம் ஆகிய 3 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாமல் இருந்தது. இந்த செய்தி அறிந்த சேவாபாரதி தொண்டர்கள் அந்த வீட்டில் குடும்ப நலப் பிரார்த்தனை செய்தனர். இந்த நிகழ்ச்சியில் 67 பேர் கலந்துக்கொண்டனர். தற்போது அந்த பெண் கர்ப்பமாக உள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

★ தாம்பரம் சானடோரியத்தில் வசிக்கும் திருமதி பகவதி என்பவருக்கு தீராத கால்வலி இருந்து வந்துள்ளது. அவர் வீட்டில் குடும்ப நல பிரார்த்தனை செய்த பிறகு இப்போது வலி குறைந்து மகிழ்ச்சியுடன் இருப்ப தாக தெரிவித்தார்.

★ திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகில் வேலஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த ஒரு குடும் பத்தில் தொடர்ந்து சண்டை நிலவி வந்தது. அவர் வீட்டில் குடும்ப நலப் பிரார்த்தனை நடைபெற்ற பின் தற்போது சண்டை மிகவும் குறைந்து விட்டதாக அந்த ஊர் கல்விதான மைய ஆசிரியை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

# புத்தாண்டு பொது நலப் பிரார்த்தனை

**நா**ம் நமக்காக செய்யும் பிரார்த்தனையைவிட மற்றவர்களுக்காக செய்யும் பிரார்த்தனைக்கு அதிக பலன் உண்டு. அதுவும் குழுவாக பிரார்த்தனை செய்யும் போது அதனுடைய பலன் இன்னும் அதிகமாக இருக்கும். இதனை கருத்தில் கொண்டு ஸ்ரீ விகாரி புத்தாண்டு அன்று மாநிலம் முழுவதிலும் புத்தாண்டு பொது நல பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டது.

புத்தாண்டு அன்று அந்த ஊரில் உள்ள ஏதேனும் ஒரு கோயிலில் குறைந்தது 25 தாய்மார்கள் ஒரே நேரத்தில் சந்தித்து விளக்கு ஏற்றி பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குடும்பத்தில் உள்ள உறுப் பினர்கள் மகிழ்வுடன் இருக்க வேண்டும், கிராம மக்கள் நோய் நொடி இல்லாமல் வாழவேண்டும், இயற்கை விவசாயம் தழைக்க வேண்டும், நாட்டில் பயங்கரவாதம் மறைந்து மக்கள் சந்தோஷத்துடன் வாழவேண்டும் போன்ற கோரிக்கைகளுடன் அந்த பிரார்த்தனை நடைபெற்றது.

●

★ சேலம் மாவட்டம் ஆத்தூரில் நடைபெற்ற பொது நலப் பிரார்த்தனை.



★ கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் நடைபெற்ற பொது நலப் பிரார்த்தனை.



★ வேலூர் மாவட்டம் வாணியம்பாடியில் நடைபெற்ற பொது நலப் பிரார்த்தனை.



# முப்பெரும் விழா

**சு**தந்திர தின விழா, பாரதமாதா பூஜை, ரக்ஷாபந்தன் ஆகியவை இணைத்து முப்பெரும் விழாவாக சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக கொண்டாடப்படுகிறது. பாரதத்தின் விடுதலைக்காக போரிட்ட சுதந்திர போராட்ட வீரர்களின் வரலாறு, அவர் களின் தியாகம் ஆகியவற்றை நினைவு கொள்ளுதல், சமுதாயத்தில் இணக்கம் கொண்டு வருவதற்காக ரக்ஷாபந்தன் ஆகிய விழாக்களை நடத்தி வருகிறோம்.




சென்னை நடமாடும் மருத்துவ ஊர்தி செல்லும் வேளச்சேரி பகுதியில் நடை பெற்ற முப்பெரும் விழா.



★ ஒசூர் ஸ்ரீ நிவேதிதா நிகேதன் அன்பு இல்லத்தில் நடைபெற்ற முப்பெரும் விழா.

## அக்டோபர் 2
# மகா சேவா தினம்

**சே**வாபாரதி தமிழ்நாடு சார்பாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2 ஆம் தேதியை மகா சேவா தினமாக கொண்டாடி வருகிறோம். இந்த ஆண்டு தமிழகத்தில் பல பகுதிகளில் மகாசேவா தினம் சிறப்பாக நடைபெற்றது.

★ சென்னை மாநகர் சார்பாக தாம்பரம் ரயில் நிலை யத்தில் மகாசேவா நிகழ்ச்சி நடைபெற்றது. தேசிய பிற்படுத்தப்பட்டோர் துணைத் தலைவர் திரு. L.முருகன். நடிகர் திரு சரத்பாபு, தென்னக ரயில்வே துணை கோட்ட மேலாளர் திரு. முகுந்த், திரு. மனோஜ், சேவாபாரதி தமிழ்நாடு மாநில துணைத்தலைவர் திரு. K. வேதகிரி, சென்னை மாநகர் தலைவர் திரு. G.மதிவாணன் செயலாளர் திரு தா. சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். 500க்கு மேற்பட்ட தொண்டர்கள் தூய்மை பணியில் ஈடுபட்டனர்.



★ திருவள்ளூர் மாவட்டம் சார்பாக திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனை தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனை துணை கண்காணிப்பாளர் டாக்டர். பூங்கோதை, G.K. மருத்துவமனை டாக்டர் S.கார்த்திகேயன், சேவாபாரதி தமிழ்நாடு மாநில அமைப்புச் செயலாளர் திரு கா.சீனிவாசன், மாவட்ட செயலாளர் திருமதி தனக்கோட்டி ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் 130



பெண்களும், ஆண்களும் பங்கேற்று தூய்மைப் பணியில் ஈடுப்பட்டனர்.



★ வேலூர் மாவட்டம் நாட்டறம் பள்ளி அருகிலுள்ள அக்ராகரம் சக்தி சாமுண்டிஸ்வரி கோயிலில் நடைபெற்ற தூய்மை பணி



★ சிதம்பரம் சாமியார் பேட்டை கடற் கரையில் நடைபெற்ற மகா சேவா நிகழ்ச்சி.




தாம்பரம் ரயில் நிலையத்தில் தூய்மை பாரதத்தை வலியுறுத்தி சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக வரையப்பட்ட சுவர் சித்திரம்.

# சேவை பண்பு பயிற்சி முகாம்

**தொ**ண்டர்கள் சேவை பணிகளை சிறப்பாகவும், தாய் உள்ளத்துடன் செய்யவும் அவர்களுக்கு சேவை பண்பு பயிற்சி முகாம்களை சேவாபாரதி தமிழ்நாடு நடத்தி வருகிறது.

மகளிர்களுக்காக டிசம்பர் மாதத்தில் மூன்று நாட்களும், மே மாதத்தில் பத்து நாட்களும் ஆண்களுக்காக மே மாதத்தில் மூன்று நாட்களும் முகாம்கள் நடைபெறுகின்றன.

## மூன்று நாட்கள் மகளிர் பயிற்சி முகாம்



**டி**சம்பர் மாதத்தில் ஓசூர், ராசிபுரம். திருப்பத்தூர், பண்ருட்டி, ஊத்துக்கோட்டை, காஞ்சிபுரம், கொரட்டூர் ஆகிய ஏழு இடங்களில் மூன்று நாட்கள் மகளிர் சேவை பண்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. மொத்தம் 290 மகளிர்கள் பயிற்சி பெற்றனர்.




# பத்து நாட்கள் மகளிர் பயிற்சி முகாம்




**ப**த்து நாட்கள் மாநில மகளிர் சேவை பண்பு பயிற்சி முகாம் மே 16ஆம் தேதி பாலக்கோடு ஸ்ரீ வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. மொத்தம் 137 மகளிர்கள் 10 நாட்கள் தங்கியிருந்து பயிற்சி பெற்றனர். அவர்களுக்கு 34 மகளிர்கள் பயிற்சி அளித்தனர். மாநில செயலாளர் திருமதி J.C. இந்துமதி முகாம் பொறுப்பாளராக இருந்து முகாமை வழிநடத்தினார்.

நிகழ்ச்சியின் ஒரு அம்சமாக ஒரு நாள் கிராமத் தொடர்பு இருந்தது. பயிற்சிக்கு வந்திருந்த மகளிர்களை 12 குழுக்காக பிரிக்கப்பட்டு 12 கிராமங்களுக்கு சென்றனர். கிராமத்தில் வீடுவீடாக சென்று பொது மக்களை சந்தித்து அவர்களுக்கு தொண்டு பணியின் முக்கியத்துவத்தை விளக்கினர். கடைசி நிறைவு நிகழ்ச்சியில் கற்றுக்கொண்ட விஷயங்களை செய்து காண்பித்தார்கள். •



# ஆண்கள் பயிற்சி முகாம்





**ஆ**ண்களுக்கான சேவை பண்பு பயிற்சி முகாம் மே **4** முதல் **6**ஆம் தேதி வரை பண்ருட்டியில் உள்ள ஸ்ரீ ரங்க ராஜீவி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாநில தலைவர் திரு. பி. ரபு மனோகர் துவக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினார். மாநில துணைத் தலைவர் திரு P.C. ஐயப்பன் முகாம் செயலாளராக இருந்து வழிநடத்தினார்.



ஆண்களுக்கான
ஒருநாள்
சேவை பயிற்சி முகாம்
டிசம்பர் 9ம்தேதி
பெரம்பூர் விவேகானந்தா
வித்யாலயா பள்ளியில்
நடைபெற்றது.

# தொடர் சேவையில் தாம்பரம்



**தி**ரு சங்கர் சேவாபாரதியின் சென்னை மாநகர பொருளாளர். தாம்பரம் சானடோரியத்தில் வசிக்கிறார். இயற்கையாகவே சேவை மனப்பான்மை கொண்ட இவர் கடந்த பல வருடங்களாக தாம்பரம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் மற்ற தொண்டர்களை இணைத்து செய்துவரும் சேவைப் பணிகள் அளப்பரியது.

சேவாபாரதி தமிழ்நாடு தாம்பரம் மாவட்டம் சார்பாக நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் சில:

★ கடந்த மூன்று ஆண்டுகளாக மாதந்தோறும் இரண்டாவது வியாழக் கிழமை தாம்பரம் ரயில் நிலையத்தை சுத்தம் செய்து விழிப்புணர்வு பிரச்சா ரத்தை சேவாபாரதி தொண்டர்கள் செய்து வருகிறார். ஒவ்வொரு மாதமும் குறைந்தது பத்து நபர்கள் இதில் கலந்துக் கொள்கிறார்கள்.

★ சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த வாகனத்தில் விளக்கு முன்பு கறுப்பு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

★ தாம்பரம் சானடோரியம் பகுதியில் ஈடுபட்டுவரும் துப்புரவு தொழிலாளர்கள், தபால்காரர்கள், இஸ்திரி போடுபவர்கள், நியூஸ் பேப்பர், கேஸ் போடுபவர்கள் மற்றும் கண்தானம் செய்தவர்களின் உறவினர் களை அழைத்து கௌரவப்படுத்தப் பட்டது. இந்த நிகழ்ச்சியில் 100 பேர் கலந்துக் கொண்டனர்.



★ விவேகானந்தர் பிறந்த நாளை முன்னிட்டு ரத்ததான முகாம் நடைபெற்றது 40 பேர் ரத்ததானம் அளித்தனர்.

★சானடோரியத்தில் அரசு சேவை இல்லத்தில் தங்கி படிக்கும் 200 சிறுவர், சிறுமி களுக்காக தொடர்ந்து நிகழ்ச்சி கள் நடைபெற்று வருகின்றன.

# வெள்ள நிவாரணப் பணி

## கேரளா வெள்ளம்

**கே**ரளாவில் ஆகஸ்ட் 15ஆம் தேதி வெள்ளம் என செய்தி கிடைத்தவுடன் சேவாபாரதி தமிழ்நாடு தொண்டர்கள் களத்தில் இறங்கினர். ஆகஸ்ட் 17ஆம் தேதி சென்னையிலிருந்து இரண்டு லாரிகளில் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து வட தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து 45 வாகனங்கள் மூலம் ரூபாய் 5 கோடி மதிப்புள்ள 360 டன் எடை கொண்ட பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இதில் சேவாபாரதி மூலம் 38 வாகனங்களும் இதர அமைப்புகள் சார்பாக ஏழு வாகனங்களும் அடங்கும்.

அரிசி 200 டன், பிஸ்கட் 30 டன், தண்ணீர் பாட்டில்கள் 2.5 லட்சம், பினாயில் 10 டன், ரூ.1.5 கோடி மதிப்புள்ள மளிகை சாமான்கள் உள்பட பல நிவாரணப் பொருட்கள் இதில் அடங்கும்.



# நிவாரணப் பொருட்கள் மக்களுக்கே!

**செ**ன்னை அயப்பாக்கத்தில் சேவாபாரதி தொண்டர்கள் வீடுகளில் பிஸ்கட், பிரட், தண்ணீர் பாட்டில்கள் சேகரித்தனர். அவர்களுக்கு களைப்பாக இருந்த போது பக்கத்தில் இருந்த கடையில் பிஸ்கட் தண்ணீர் வாங்கிக் குடித்தனர். அருகில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் நீங்கள்தான் பிஸ்கட் தண்ணீர் வைத்துள்ளீர்களே; அதை எடுத்துக்கொள்ள வேண்டியது தானே எனக் கேட்டார். அதற்கு அவர்கள் இல்லை இது "கேரள வெள்ள நிவாரண பணிக்காக சேகரிக்கப்பட்ட பொருட்கள். இதை நாங்கள் பயன்படுத்த மாட்டோம்" என்றனர். இதை கேட்ட அவர் ஆச்சரியப்பட்டு போனார். ●




## தொழிற்பயிற்சி கற்றார், பொருள் ஈட்டுகிறார்



**தி**ருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகிலுள்ள சிவாடா மேட்டு காலனியை சேர்ந்தவர் காயத்ரி. இவர் சேவாபாரதி சேவை பயிற்சி வகுப்பில் கலந்துக் கொண்டு மணிமாலைகள் தயாரிக்கும் முறையை கற்றுக் கொண்டார். பின் அதன் மூலம் தனது வீட்டில் இருந்தபடி சுயதொழில் செய்து 300 ரூபாய் முதலீட்டில் 2000 ரூபாய் வருமானம் ஈட்டிருக்கிறார்.

# கஜா புயல் நிவாரணப் பணி




கஜா புயலால் பாதிக்கப் பட்ட நாகப்பட்டினம் பகுதி களில் மருத்துவ சேவை ஆற்றுவதற்காக சென்னையில் செயல்பட்டு வந்த இரண்டு நடமாடும் மருத்துவ ஊர்திகளை உடனடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. சுமார் ஒரு மாத காலத்திற்கும் மேல் நாகப்பட்டினம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளுக்கு சென்று அங்கு மருத்துவர் குழு சேவை யாற்றியுள்ளது. அதே போல குடிசை வீடுகளின் மேல் போட தார்பாய்கள், மற்ற நிவாரணப் பொருட்கள் 13 லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. ●



## சேவாபாரதி தமிழ்நாடு மூலம் நடைபெறும் கல்வி தான மையங்கள்

| | | | |
|---|---|---|---|
| சென்னை பெருநகர் | | 60 | ஆவரங்குப்பம்,நாற்றம்பள்ளி |
| 1 | பழைய எம்.ஜி.ஆர் நகர்,திருவொற்றியூர் | 61 | அம்பலூர், வாணியம்பாடி |
| 2 | தியாகி சத்தியமூர்த்தி நகர், திருவொற்றியூர் | 62 | அம்பூர்பேட்டை,வாணியம்பாடி |
| 3 | சின்ன மாத்தூர், திருவொற்றியூர் | 63 | புதூர்நாடு, திருப்பத்தூர் |
| 4 | கார்கில் வெற்றி நகர், திருவொற்றியூர் | 64 | சேத்துவண்டை, குடியாத்தம் |
| 5 | பெரியசேக்காடு, திருவொற்றியூர் | 65 | லிங்குன்றம், குடியாத்தம் |
| 6 | பெரியசேக்காடு, திருவொற்றியூர் | 66 | தோப்புகானா, ஆற்காடு |
| 7 | S A காலனி, வியாசர்பாடி, | 67 | அரவன் சிலை பின்புறம், ஆற்காடு |
| 8 | கொரட்டூர் | 68 | திமிரி, ஆற்காடு |
| 9 | அயனாவரம் | 69 | கொட்டாரமடுகு, குடியாத்தம் |
| 10 | அயப்பாக்கம் | | |
| 11 | குன்றத்தூர் | கடலூர் மாவட்டம் | |
| 12 | விருகம்பாக்கம் | 70 | B. முட்லூர், சிதம்பரம் |
| 13 | லக்ஷ்மிபுரம், திருவான்மியூர் | 71 | கொத்தட்டை,சிதம்பரம் |
| 14 | லக்ஷ்மிபுரம், திருவான்மியூர் | 72 | சிலம்பிமங்கலம், சிதம்பரம் |
| 15 | திடீர் நகர், திருவான்மியூர் | 73 | அகரம்காலனி,பரங்கிபேட்டை |
| 16 | நேரு நகர், வேளச்சேரி | 74 | தெற்குபிச்சாவரம், சிதம்பரம் |
| 17 | தண்டீஸ்வரம், வேளச்சேரி | 75 | கோபாலபுரம்,பரங்கிபேட்டை |
| 18 | முடிச்சூர், தாம்பரம் | 76 | வடஹரி ராஜபுரம், சிதம்பரம் |
| 19 | செம்பாக்கம், தாம்பரம் | 77 | வில்லியநூர் சிதம்பரம் |
| | | 78 | பரங்கிபேட்டை, சிதம்பரம் |
| திருவள்ளூர் | | 79 | மேல்கவரப்பட்டு, பண்ருட்டி |
| 20 | மேதினபுரம், திருத்தணி | 80 | பண்டாரக்கோட்டை, பண்ருட்டி |
| 21 | பட்டாபிராமபுரம், திருத்தணி | 81 | செட்டிப்பட்டறை, பண்ருட்டி |
| 22 | ஸ்ரீநிவாசபுரம், திருத்தணி | 82 | பூங்குன்றம், பண்ருட்டி |
| 23 | ஸ்ரீநிவாசபுரம், திருத்தணி | 83 | மணம்தவிழ்ந்தபுத்தூர், பண்ருட்டி |
| 24 | நெமிலி, திருவாலங்காடு | | |
| 25 | நெமிலி, திருவாலங்காடு | கிருஷ்ணகிரி மாவட்டம் | |
| 26 | வேலஞ்சேரி,திருத்தணி | 84 | நரசிம்மா காலனி ஒசூர் |
| 27 | முருகம்பட்டு,திருவாலங்காடு | 85 | மத்திகிரி ஒசூர் |
| 28 | சிவாடா, திருவாலங்காடு | 86 | பாளையம், ஒசூர் |
| 29 | சிவாடா, திருவாலங்காடு | 87 | மலைகோவில் அடிவாரம்,ஒசூர் |
| 30 | முருக்கூர், திருத்தணி | | |
| 31 | பெருமுடிவாக்கம், எல்லாபுரம் | தர்மபுரி மாவட்டம் | |
| 32 | கன்னிகைப்பேர் | 88 | ராஜா கொள்ள அள்ளி |
| 33 | கன்னிகைப்பேர் | 89 | B.S. அக்ராகாரம் |
| 34 | திருகண்டலம், எல்லாபுரம் | 90 | பண்ட அள்ளி |
| 35 | நெய்வேலி, ஊத்துக்கோட்டை | 91 | பள்ளப்பட்டி |
| 36 | பூரிவாக்கம், எல்லாபுரம் | 92 | B. செக்காரப்பட்டி கொட்டாய் |
| 37 | பூரிவாக்கம், எல்லாபுரம் | 93 | B. செக்காரப்பட்டி கொட்டாய் |
| 38 | ஆயலூர் | 94 | குறிஞ்சிபுரம் |
| 39 | தாமரைப்பாக்கம் | 95 | பங்குநத்தம் |
| 40 | புன்னப்பாக்கம் | 96 | ராமர் கூடல் |
| 41 | வைரவன் குப்பம், பழவேற்காடு | 97 | சந்தாரப்பட்டி |
| 42 | தோனிரேவு, பழவேற்காடு | 98 | திப்பட்டி |
| 43 | பழவேற்காடு | 99 | அருந்ததியர் காலனி |
| 44 | நக்கத்துறவு, பழவேற்காடு | 100 | A. செக்காரப்பட்டி கொட்டாய் |
| 45 | எடமணி, பழவேற்காடு | 101 | வித்யாமந்திர், பாலக்கோடு |
| 46 | கோரைகுப்பம், பழவேற்காடு | 102 | பாலக்கோடு மேல் தெரு |
| 47 | சாத்தான்குப்பம், பழவேற்காடு | 103 | S. பட்டி, அரூர் |
| 48 | காஞ்சிவயல், பழவேற்காடு | 104 | ஓட்டம்பட்டி, அரூர் |
| 49 | அரங்கன்குப்பம், பழவேற்காடு | 105 | கன்னிப்பட்டி, காரிமங்கலம் |
| 50 | திருமலை,பழவேற்காடு | 106 | கன்னிப்பட்டி, காரிமங்கலம் |
| 51 | கூனங்குப்பம்,பழவேற்காடு | 107 | கன்னிப்பட்டி, காரிமங்கலம் |
| | | | |
| திருவண்ணாமலை | | சேலம் மாவட்டம் | |
| 52 | கொடியாலம் | 108 | பொன்னம்மாபேட்டை |
| 53 | வந்தவாசி | 109 | தில்லை நகர் |
| | | 110 | புத்து மாரியம்மன் கோயில் தெரு |
| வேலூர் | | 111 | பைத்தூர் புதூர், ஆத்தூர் |
| 54 | சொரக்காயல்நத்தம், நாட்டறம்பள்ளி | 112 | சோமம்பட்டி, வாழப்பாடி |
| 55 | ராமநாயக்கன்பேட்டை,வாணியம்பாடி | 113 | ஏத்தாப்பூர் |
| 56 | குருவன்வட்டம், நாட்டறம்பள்ளி | | |
| 57 | நாட்டறம்பள்ளி | ஈரோடு மாவட்டம் | |
| 58 | முத்தானூர்,புதுப்பேட்டை | 114 | பூந்துறை சேமூர் |
| 59 | பெத்தகல்லுப்பள்ளி,ஜோலார்பேட்டை | 115 | பூந்துறை சேமூர் |

